முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அரிவாட்டாய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

14.11.2018, புதன்கிழமை

1. **சன்மார்க்கம் தழைத்து ஓங்க**
   **சற்குருவாக வந்த ஞானியே**
   **உன்மார்க்கம் உலகோர் ஏற்க**
   **உலகமே உய்வுறும் எனக் கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குறையிலா **விளம்பி துலை திங்கள்**
   **தெரியவே எழுநான்கு திகதி புந்திவாரம்**
   **(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 28ம் நாள் 14.11.2018, புதன்கிழமை)**
   **தேசிகனுக்கு அரிவாட்டாய நாயனார் யானும்**
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான அரங்கன் மார்க்கம்
   ஞானவழி தேடல் கொண்டவரெல்லாம்
   நம்பகம் கொண்டு வந்து ஏற்க
4. ஏற்கவே நாளும் தொடரவே
   ஏற்புடைய மக்களெல்லோரும்
   அற்புதமான உண்மை நெறி வழி
   ஆற்றலும் ஞானத் தெளிவும்
5. தெளிவுபட அழியாமையும் பெறுவர்
   தேசிகன் காட்டும் சைவநெறி
   வலிமையான சமத்துவ ஞானநெறி
   வருமுலகில் அனைவரும் ஏற்க
6. ஏற்கவே பேருலகம் எங்கும்
   இணையிலா சாத்வீகம் பெருகி
   உற்றதொரு சமத்துவ உலகம்
   உயிர் காக்கும் ஆன்மீக ஞான
7. ஞான உயர் பாதுகாப்புமிக்க
   நல்லுலகம் ஆகவே மாறும்
   தானதரும சக்தி பரவிட
   தருமபலம் கொண்ட உலகமாகும்
8. ஆகவே கலிகால மக்களே
   அறம் வளர்க்கும் ஞானவழி
   யுகமாற்றக் கொள்கை தன்னை
   உலகோர் உடன் ஏற்க வேண்டும்
9. வேண்டியே துறையூர் ஞானபூமி
   வேலவன் ஏழாம் படை வீடு
   கொண்டநல் பிரணவக் குடிலை
   குவலயத்தார் அணுகி வந்து

10. வந்துமே வாழும் மாதவசியான
வள்ளல் ஆறுமுக அரங்கனை
சிந்தை வைத்து தாள்பணிந்து
சித்தி தரும் திருவடி தீட்சை பெற

11. தீட்சை பெற தெளிவு கிட்டும்
தேசிகனை தொடர்ந்து வர
மாட்சிமைபட தருமம் தொடர
மண்ணுலகே ஞானபூமி ஆகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் அரிவாட்டாய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகினில் பேதாபேதங்கள் நீங்கிய சகமார்க்கமாம் சன்மார்க்கம் தழைத்து ஓங்கிடவே சற்குருவாய் வந்து உலக மக்களுக்கு ஞானஉபதேசங்கள் அருளி வழிநடத்திடவே அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது மார்க்கத்தினை உலக மக்களெல்லாம் உளமார ஏற்று பின்பற்றி வரவர, உலகமே உயர்வு பெறும் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 28ம் நாள் 14.11.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே அரிவாட்டாய நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அரிவாட்டாய நாயனார்.

உலகினில் ஞானத்தை தேடி அலைகின்ற மக்களெல்லாம் ஞானம் அளித்து ஜென்மத்தைக் கடைத்தேற்றும் வல்லமைமிக்க ஆறுமுக அரங்கனின் ஞானவழிகளை முழுநம்பிக்கையோடு ஏற்று கடைப்பிடித்திட்டால் அரங்கனின் மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட மக்கள் அனைவரும் அற்புதமான உண்மை நெறி வழியில் சென்று அற்புதமான ஆற்றலையும் ஞானத்தெளிவினையும் அழிவிலாமையையும் பெறுவார்கள்.

மிகத் தெளிவாக ஞானம் அடைந்திட ஜீவதயவே முக்கியம் என்பதையும் கொல்லாநெறியே இவ்வுலகைக் காக்கும் என்றும் அறிவுறுத்தி உலகோர்க்கு ஞானத்தெளிவை அளிக்கும் அரங்கன் கூறும் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்தசைவ உணவை மேற்கொள்கிறதும் அனைத்திலும் சைவத்தை கடைப்பிடிக்கின்ற சைவநெறியினை ஏற்றும், வலிமைமிக்க சமத்துவ ஞானநெறியினையும் உலக மக்களெல்லாம் ஏற்று கடைப்பிடித்திட உலகம் எங்கும் ஈடு இணையில்லாத வகையிலே சாத்வீக குணங்கள் பெருகி உலகமெங்கும் அமைதியும் சமத்துவமும் பெருகி பேதாபேதங்கள் எல்லாம் விலகி வன்செயல்கள் நீங்கி உயிர்காக்கும் ஆன்மீக ஞானம் வளர்ந்து உயர்வான அருள்பாதுகாப்பு பெருகி ஞானிகளின் அருளாசிகளை பெற்றிட்ட தர்ம உலகமாக நல்லுலகமாக இவ்வுலகம் மாறிடும்.

உலகினில் தானதருமங்களை மக்கள் தன்னலமற்று அதிகமாக செய்திட செய்திட, உலகினில் தருமம் பெருகி தருமபலம் கொண்ட தர்மஉலகமாக மாறிடும். ஆதலினால் கலிகாலத் துன்பங்களில் சிக்குண்டு தவிக்கின்ற கலியுக மக்களே அரங்கன் கூறுகின்ற அறம் வளர்க்கும் ஞானவழி யுகமாற்றக் கொள்கைகளை உலக மக்கள் மறுப்பேதும் இன்றி உடன் ஏற்று நடந்திட வேண்டும்.

உலகப்பேராசான் அவதார ஞானி ஆறுமுக அரங்கன் வாழுகின்ற ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை உலக மக்கள் எல்லாம் உடன் அணுகி ஆங்கே உலக நலன் கருதி தவம் இயற்றி தானதருமங்களை அளவிலாது செய்து உலகைக் காத்து ரட்சிக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை சித்திதரும் திருவடிகளை வணங்கி திருவடி தீட்சைதனை பயபக்தியுடன் பணிந்து ஏற்று அரங்கன் கூறும் உபதேச வழி நடந்திட அவரவர்க்கும் ஞானத்தெளிவு உண்டாகும். தேசிகனாரை பின்தொடர தொடர அரங்கனின் தருமங்களில் பங்கு கொண்டு தர்மங்களை தொடர்ந்து செய்து வரவர, இந்த பூமியே ஞானமும் தருமமும் பெருகி ஞானபூமியாக மாறிடும் என உலக மக்கள் அரங்கனை நாடி தரிசித்து அரங்கன் ஆசி பெற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி கூறுகிறார் தமது ஒளி சூட்சும நூலின் மூலம் மகான் அரிவாட்டாய நாயனார்.

–சுபம்–